யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

# Field Work Centre

# தவணைப் பரீட்சை, யூன் - 2015
# Term Examination, June - 2015

| தரம் :- 13 (2015) | விவசாய விஞ்ஞானம் - I | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

01) பயிர்த் தாவரம் ஒன்றின் முதிர் இலைகள் வளர்ச்சி குன்றியும் சிறிய ஊதா நிறப் பொட்டுக்கள் தோன்றியும் காணப்பட்டது. இப்பயிர் தாவரத்திற்கு ஏற்பட்ட போசணை மூலகப் பற்றாக்குறையை பூர்த்தி செய்ய இடவேண்டிய அசேதன வளமாக்கி

1) யூரியா 2) TSP 3) MOP
4) டொலமைட் 5) அமோனியம் சல்பேற்

02) களித்துணிக்கைகள் தொடர்பாக சரியான கூற்று

1) மண்ணில் காணப்படும் உயிர்ப்பற்ற அசேதன கூறு
2) மேற்பரப்பில் அதிகளவு மறையேற்றங்களை கொண்டிருப்பதால் மண் மாதிரியின் கற்றயன் பரிமாற்றுதிறனை அதிகரிக்கும்
3) 0.02mm இலும் குறைந்த விட்டமுடைய துணிக்கைகள்
4) களியின் அளவு மண் மாதிரியில் அதிகரிப்பின் மண் வளியூட்டம் அதிகரிக்கும்
5) களித் துணிக்கைகள் மண் மாதிரியில் அதிகரிப்பின் மண் கரடுமுரடான இழையமைப்பைப் பெறும்

03) பால் இறங்கலை நிரோதிப்பது

1) ஒட்சிற்ரோசின் 2) அதிரீனலீன் 3) சூரியஒளி
4) ஈஸ்திரஜின் 5) இலக்ரிக் அமிலம்

04) மண் இறுக்கமடைதல் பற்றிய சில கூற்றுகளை கருதுக.

A - ஈர மண்ணின் மீது பாரமான வாகனங்களை நகர்த்தும் போது மண் இறுக்கமடையும்
B - தொடர்ச்சியான பயிர்ச்செய்கையால் மண் இறுக்கமடையும்
C - மண்ணில் சேதனப் பொருள் அளவு அதிகரிப்பதால் மண் இறுக்கமடையும்
D - மண்புளுவின் செயற்பாடு குறைவடைவதால் மண் இறுக்கமடையும்

சரியானவை

1) A, B, C 2) A, C, D 3) A, B,D 4) B, C, D 5) A, B, C, D

05) காற்றரிப்பால் பாதிக்கப்படும் பிரதேசத்திற்கு பொருத்தமான மண் காப்பு முறை

1) சமஉயரக் கோட்டு பயிர்ச்செய்கை 2) வைக்கோல் மூடுபடை
3) பனையோலை புதைத்தல் 4) ஜிப்சம் சேர்த்தல்
5) படிக்கட்டு பயிர்ச்செய்கை

06) விவசாயத்துறையில் தற்போது ஏற்படும் பிரச்சனைகளிற்கு தீர்வளிக்கக்கூடிய கூற்றுக்களை தெரிவு செய்க.

A - உழவர் சந்தைகளை நிறுவதன் மூலம் இடை தரகர்களின் தலையீட்டை குறைக்க முடியும்.
B - நகரமயமாதலினால் விவசாய நிலங்கள் குறைவடைவதை தடுத்தல்
C - தொழிலாளர் பற்றாக்குறையை நீக்க ஊதியத்தை உயர்த்துதல்
D - உள்நாட்டில் விளைச்சல் கிடைக்கும் காலத்தில் இறக்குமதி தீர்வைகளை அதிகரித்தல்

1) A, B, C 2) B, C, D 3) C, D, A 4) A, C, D 5) A, B, C, D

07) இலங்கையில் வடபகுதி விவசாயிகள் தமது பெரும் போக பயிர்ச்செய்கைக்கு நம்பியிருக்கும் மழைவீழ்ச்சி வகைகள்

1) முதலாம் இடைப்பருவ மழை, தென்மேல் பருவப் பெயர்ச்சி மழை
2) வடகீழ் பருவப் பெயர்ச்சி மழை, முதலாம் இடைப்பருவ மழை
3) தென்மேல், வடகீழ் பருவப் பெயர்ச்சி மழை
4) இரண்டாம் இடைப்பருவ மழை, வடகீழ் பருவ மழை
5) இரண்டாம் இடைப்பருவ மழை, தென்மேல் பருவப் பெயர்ச்சி மழை

08) புவி வெப்பமடைதலில் அதிக பங்களிக்கும் வாயுக்கள்

1) $O_2, CO_2$ 2) $N_2, CO_2$ 3) $CO_2, CH_4$
4) $O_2, H_2O$ 5) $O_3, CH_4$

09) ஓரினப் பின்னடைவானது ஓரின ஆட்சியுடையதுடன் கலப்பினப் பெருக்கம் செய்யும் போது பல்லினப் பிறப்புரிமை அமைப்புடைய எச்சத்தை பெறுவதற்கான சந்தர்ப்பம்

1) 0% 2) 25% 3) 50% 4) 75% 5) 100%

10)

A - உக்கிகொண்டிருக்கும் சேதனப் பொருட்கள்
B - $Ca^{2+}$
C - $Na^{+}$
D - $Fe^{2+}$
E - எச்ச மண்

மண் கட்டமைப்பை விருத்தியாக்குவதில் பங்களிப்பு செய்யும் காரணிகள்

1) A, B, C, D 2) B, C, D, E 3) C, D, E, A 4) D, E, A, B 5) A, E, B, C

11) மிக விரைவில் உக்கலடையக் கூடியதும் மண்ணிற்கு அதிக நைதரசனை வழங்கக் கூடியதும்

1) வைக்கோல் 2) மாட்டுச்சாணி 3) கோழி எச்சம்
4) சணல் 5) கிளிசறிடியா இலை

12) காற்று பதியின் போது வளையம் வெட்டுதலின் நோக்கம்

1) கிளைக்கு கிடைக்கும் நீரின் அளவை குறைத்து வேர்விடலை தூண்டல்
2) கிளையில் $C/_N$ விகிதத்தை அதிகரித்து வேர்விடலை தூண்டுதல்
3) வேர்கள் தோன்றிய பின் இலகுவாக வேறாக்கி கொள்ள முடிதல்
4) வெட்டப்பட்ட இடத்தில் கிளைகள் வளரச் செய்தல்
5) நோய் தொற்றைத் தவிர்த்தல்

13) இழைய வளர்ப்பிற்குப் பயன்படுத்தப்படும் உள்ளீடுகளும் அவற்றின் நோக்கங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இதில் தவறானது

1) ஏகார் - ஊடகத்தை கட்டுப்படுத்துதல்
2) ஓமோன் - செய்முறையை ஆழுதல்
3) சுக்குரோஸ் - சக்தியை வழங்க
4) கித்துள்மா - pH ஐ சரி செய்ய
5) பிறபொருள் எதிரி - தேவையற்ற தொற்றை தவிர்ப்பதற்கு

14) நுண் நீர்ப்பாசன முறை தொடர்பாக

1) சாய்வான அதிக காற்று வீசும் பிரதேசத்திற்கு பயன்படுத்த முடியாது.
2) பயிர்களின் வேர்கள் நன்கு பரந்து வளர்ந்து மண்ணை பற்றி பிடித்திருக்கும்
3) மண்மேற்பரப்பு ஆவியாதல் அதிகரித்து காணப்படும்
4) தாவர வேர்த்தொகுதி பிரதேசம் எப்போதும் வயற்கொள்ளளவு நிலையில் இருக்கும்
5) களை வளர்ச்சி துரிதமடையும்

15) மண்ணை வெட்டிப் புரட்டும் போது எதிர்பார்க்கக்கூடியது
   1) மண் துளைத்தன்மை கூடும், நீர்வடிப்பு, நீர் பற்றும் திறன் குறையும்
   2) மண் தோற்ற அடர்த்தி கூடும், துணிக்கை அடர்த்தி குறையும்
   3) மண் தோற்ற அடர்த்தி குறையும், நீர் பற்றும் திறன் கூடும்
   4) களை, பூச்சி பீடைத்தாக்கம் அதிகரிக்கும், நீர் பற்றும் திறன் குறையும்
   5) மண் வளியூட்டம் அதிகரிக்கும், நீர் பற்றும் திறன் குறையும்

16) நிழல் விரும்பும் தாவரத்தை வளர்க்க பொருத்தமான ஆழுகை இல்லம்
   1) வலை இல்லம்   2) பொலித்தீன் இல்லம்   3) கண்ணாடி இல்லம்
   4) வெப்பப் பாத்திகள்   5) தொங்கும் உறைகள்

17) கபினற் வகை அடைப்பொறியில் முட்டைகள் பெரிக்கும் பிரிவிற்கு மாற்றப்படுவது. அடைகாத்தலின்
   1) 14ம் நாள்   2) 16ம் நாள்   3) 18ம் நாள்   4) 20ம் நாள்   5) 21ம் நாள்

18) களை மாதிரி ஒன்றின் இலைகள் ஒடுங்கி நீண்டு காணப்பட்டது. இலை மடல் காணப்பட்டது. தண்டின் உள்ளிடம் வெறுமையாக காணப்பட்டது. பூக்கள் காணப்பட்டது. மேற்கூறப்பட்ட இயல்புகள் கொண்ட களையாக இருக்கக்கூடியது
   1) மும்மூட்டு கோரை   2) தயிர்வாழை   3) கோழிச்சூடான்
   4) வயல்மாதுளை   5) வெடிபலவள்

19) நீண்ட காலம் பயிர்ச்செய்கைக்குட்படுத்தாது காணப்பட்ட நிலத்தை பயிர்ச்செய்கைக்குட்படுத்த முன்பு களைகளை கொல்ல பொருத்தமான களை நாசினி வகை
   1) தெரிவு, தொகுதி   2) முழுமை, தொகுதி   3) தரிவு, தொடுகை
   4) முழுடை, தொடுகை   5) அகன்ற இலை, தொடுகை

20) நெல் இலைகளின் குறித்த பகுதி முழுவதுமாக அரித்து உண்ணப்பட்டு இருந்தது. இவ்வகை சேதத்தை ஏற்படுத்தியிருக்கலாம் என சந்தேகிக்கக்கூடிய பீடைகளின் கூட்டம்
   1) நெல்மூட்டு பூச்சி, தண்டுத்தத்தி
   2) இராணுவப்புளு, நத்தை, மடற்புர
   3) அவுலக்கபோறா, கபிலத் தாவரத்தத்தி, சந்துகுத்தி
   4) மடற்புளு, இலையரிபுளு, கபிலத் தாவரத்தத்தி
   5) மேற்கூறிய எதுவுமல்ல

21) வளர்ச்சி சீராக்கிகளின் தொழிற்பாடுகள் தரப்பட்டுள்ளது.

   A - முனையரும்புகளின் வளர்ச்சி
   B - நீர்தகைப்பின் போது இலைவாய்கள் மூடச் செய்தல்
   C - பாதகமான சூழலின் போது அங்குரத் தொகுதியை உறங்கு நிலையடையச் செய்தல்
   D - வித்து உறங்கு நிலையை முடிவுக்கு கொண்டு வருதல்
   E - வெட்டுப்படை உருவாக்குதல்
   மேற்கூறப்பட்டுள்ளவற்றுள் அப்சிரிக் அமிலத்தின் தொழில்
   1) A, B, C   2) B, C, D   3) A, C, D   4) B, C, E   5) C, D, E

22) தாவரங்களின் ஒளித்தொகுப்பு நடைபெறும் மென்சவ்வுகளின் சிறு பைகள் அழைக்கப்படுவது
   1) தைலகோபிட்   2) மணியுருக்கள்   3) ஒளித் தண்டுகள்
   4) போற்றன்கள்   5) இழைமணிகள்

23) RRYy என்ற பிறப்புரிமை அமைப்புடைய அங்கியுடன் இனம் கலக்கும் போது உருவாகும் எச்சங்களின் RRYy பிறப்புரிமை அமைப்பு தோன்றுவதற்கான நிகழ்தகவு
   1) 1   2) 0.75   3) 0.5   4) 0.25   5) 0.125

24) மையநீக்கவிசை பம்பி ஒன்றை செயற்படுத்திய போது மோட்டார் தொழிற்படும் போது உட்புகு குளாய் மூலம் நீர்மேல் எழவில்லை. இதற்குக் காரணமாக இருக்கக் கூடியவை

A - நீர்ப்பம்பியினுள் வாயு சிறைப்பட்டிருத்தல்

B - அடி வால்விலிருந்து நீர் கசிதல்

C - சுழலித்தண்டு, கவசப் பகுதியில் நீர் கசிவு

D - உட்புகு குளாய் சாய்வாக காணப்படல்

1) A 2) B 3) C 4) A, B ,C 5) B, C, D

25) நிறை போட்டிச் சந்தை ஒன்றில் விற்பனையாகும் பண்டம் ஒன்றின் கேள்வி, நிரம்பல் சமன்பாடுகள் பின்வருமாறு

$Qdx = 100 - 5Px$

$QSx = -100 + 5Px$

குறித்த பண்டம் $x$ இன் விலை ரூபாயில்

1) 5 2) 11 3) 13 4) 17 5) 19

26) பண்டம் ஒன்றின் விலை 50 ரூபாயாக உள்ள போது 200 அலகு நுகரப்பட்டது. விலை 60 ரூபாயாக உயர்ந்ததும் கேள்வி 150 ஆக குறைந்தது. இச்சந்தர்ப்பத்தில் கேள்வி நெகிழ்ச்சி

1) 0 2) 0 - 1 3) 1 4) 1 < 5) $\propto$

27) கோழி முட்டையோடு மெல்லியதாகவும் உடையக்கூடியதாகவும் காணப்பட்டது. காரணம்

1) பக்ரீரியா தொற்று
2) வைரஸ் தொற்று
3) பங்கஸ் தொற்று
4) கல்சியப் பற்றாக்குறை
5) புரோட்டோசோவா தொற்று

28) கோழியின் முன்சிறுகுடல் மென்சவ்வினால் சுரக்கப்படும் நொதியங்கள்

A - திருச்சின் B - லக்ரேஸ் C - அமைலேஸ்

D - மோல்ரேசு E - இலிப்பேசு

1) A, B 2) C, D 3) B, D 4) A, C 5) B, C

29) சோடியம் நைத்திரேட் இறைச்சிக்கு சேர்க்கப்படுவது

1) சுவையூட்டியாக 2) நிறமூட்டியாக 3) நற்காப்பியாக
4) சுவையூட்டி, நற்காப்பி 5) நிறமூட்டி, நற்காப்பி

30) பெண் ஒருவரின் தொண்டைப் பகுதியில் வீக்கமுற்று கழலை போன்ற அமைப்பு காணப்பட்டது. இது எப்போசணை மூலகப் பற்றாக் குறைபாட்டால் ஏற்பட்டது

1) Fe 2) I 3) Cu 4) P 5) Ca

31) விவசாயி ஒருவரது நிலம் எண்ணைக் கசிவுகளினால் மாசுபட்டிருந்தது. ஏனைய வசதிகள் வழமையானதாக காணப்பட்டது. இந்நிலத்தில் அவரால் பயிர்ச்செய்கை மேற்கொள்ள பொருத்தமான முறை

1) மெல்லிய போசணைப் படலமுறை
2) ஆழ் சுற்றோட்ட முறை
3) ஸ்ரைரொபோம் பெட்டி முறை
4) கிடை வளர்ப்பு முறை
5) மிதப்பு வளர்ப்பு முறை

32) வீட்டுத் தோட்டம் தொடர்பான கூற்றுக்களைக் கருதுக.

A - வீட்டுத் தோட்டத்தில் ஓரினப் பயிர்ச்செய்கை நடைபெறும்

B - குடும்ப உணவு காப்பு உறுதி செய்யப்படும்

C - கீரை வகைகள் வீட்டுக்கண்மையில் பயிரிடப்படும்

D - ஆரோக்கிய வாழ்வு உறுதிப்படுத்தப்படும்

E - அசேதன இரசாயன பசளை மட்டும் பயன்படுத்தப்படும்.

சரியானவை

1) A, B, C 2) B, C, D 3) C, D, E 4) D, E, A 5) A

33) சம உற்பத்தி வளையிகள் விளக்குவது
1) காரணி - விளைவு தொடர்பை
2) விளைவு - விளைவு தொடர்பை
3) காரணி - காரணி தொடர்பை
4) காரணி - இலாப தொடர்பை
5) காரணி - செலவு தொடர்பை

34) புரோயிலர் கோழி ஒன்று 42 நாட்களின் முடிவில் 2.4*kg* நிறை காட்டியது. கோழிக்கு சராசரியாக 3.8*kg* உணவு வழங்கப்பட்டது. குறித்த கோழியின் உணவு மாற்றீட்டு விகிதம்
1) 1.8
2) 6.8
3) 1.5
4) 2.4
5) 3.6

35) 360*kg* முதிர் உடல் நிறை கொண்ட மாட்டு வர்க்கம் ஒன்றின் கன்னிப் பசுவை சினைப்படுத்துவதற்கு ஏற்ற உடல் நிறை
1) 300 *kg*
2) 280 *kg*
3) 461 *kg*
4) 232 *kg*
5) 264 *kg*

36) CMT சோதனை செய்யப்படுவது பாலில் உள்ள
1) கொழுப்பு சதவீதத்தைத் துணிய
2) புரத சதவீதத்தைத் துணிய
3) கொழுப்பற்ற திண்மங்களின் அளவை துணிய
4) மடியழற்சி நோயை அறிய
5) கல்சியத்தின் அளவை துணிய

37) பயிராக்கவியல் முறை மட்காப்பு
1) சம உயரக்கோட்டு சால்
2) படிக்கட்டுகள்
3) சமஉயரக்கோடு வழியே பயன்படுத்தல்
4) கல்வேலி அமைத்தல்
5) கான்களின் சாய்வின் வழியே குழிகள் அமைத்தல்

38) பல்முழையம் கொள்ளும் தன்மை தொடர்பாக சரியானது
1) இது பப்பாசி தாவரத்தில் நடைபெறும்
2) உருவாகும் தாவரம் தாய் தாவரத்தை முற்றிலும் ஒத்தது
3) மாறல்கள் உருவாவதற்கான வாய்ப்பு அதிகம்
4) ஒருவித்திலிருந்து ஒரு மகட் தாவரம் மாத்திரம் உருவாகும்
5) ஒருவித்திலை தாவரங்களில் நடைபெறும்

39) *Clostridium botilunum* ஒரு
1) தாவர நோயாக்கிப் பங்கஸ்
2) தாவர நோயாக்கி பக்ரீரியா
3) உணவு நஞ்சாக்கும் பங்கஸ்
4) உணவு நஞ்சாக்கும் பக்ரீரியா
5) நைதரசன் பாதிக்கும் பக்ரீரியா

40) தொடர்ச்சியாக ஒரே பீடை நாசினியை பயன்படுத்தின் அதன் வினைத்திறன் குறையும். இதற்கான காரணம்
1) காலத்துடன் பூச்சிநாசினியின் நச்சுத் தன்மை குறையும்
2) பீடை நாசினியின் செயற்படுகாலம் காலாவதியாதல்
3) செயற்படு பாதார்த்தம் படிப்படியாக குறைதல்
4) பீடைகள் மணத்தை முன்னரே அறிந்து தப்பித்தல்
5) பீடைகள் பீடைநாசினிக்கு எதிர்ப்பை உருவாக்குதல்

41) நெல்லின் பாற்பருவத்தில் தாக்கும் பீடை
1) கபிலத்தாவரத் தத்தி
2) கொப்புள ஈ
3) இலைச்சுருட்டி
4) நெற்சத்து குத்தி
5) நெல்மூட்டு பூச்சி

42) நெல்வயல்களில் இருந்து வளி மண்டலத்திற்கு விடப்படும் பச்சைவீட்டு வாயு

1) $CO_2$ 2) $CH_4$ 3) CFC 4) $O_3$ 5) $H_2O$

43) ஸ்கேவி நோய்க்கு காரணமான விற்றமின் பற்றாக்குறை

1) பிரிடொக்சின் 2) தயமின் 3) அஸ்கோபிக் அமிலம்
4) நியாசின் 5) றைபோபிளேவின்

44) காலநிலை காரணி - காலநிலை அளவீட்டு உபகரணச் சோடியில் தவறானது

1) சாரீரப்பதன் - சிட்சின் உயர்வு இழிவு வெப்பமானி
2) மழைவீட்சி செறிவு - தானியங்கி மழைமானி
3) வளியமுக்கம் - பாரமானி
4) மண் வெப்பநிலை - மண்வெப்பமாணி
5) ஒளிக்கால அளவு - சூரிய ஒளிர்வுமானி

45)

A - வடகீழ் பருவப் பெயர்ச்சி காற்று காரணமாக இலங்கையின் பல பாகங்கள் மழையை பெறுகிறது.

B - சூறாவளியின் செல்வாக்கும், மத்திய மலைநாட்டில் காணப்படும் மலைகளும் வடகீழ் பருவப் பெயர்ச்சி காற்றில் இருந்து மழை கிடைப்பதை உறுதி செய்கின்றது.

1) A சரி, B சரி
2) A சரி, B பிழை
3) A, B சரி, A மூலம் B விளக்கப்படுகிறது
4) A, B சரி B மூலம் A விளக்கப்படுகிறது
5) A, B பிழை

46) அவரை வித்துக்கள் களஞ்சியப்படுத்த பொருத்தமான சாரீரப்பதன்

1) 5% 2) 8% 3) 14% 4) 3% 5) 12%

47) ஒன்றிணைந்த பீடை முகாமைத்துவம்

1) பீடை நாசினி பயன்பாட்டை முற்றாக தடை செய்யும்
2) பீடையை முற்றாக அழிக்கும்
3) கிடைக்கத்தக்க எல்லா பீடை முகாமைத்துவ முறைகளையும் பயன்படுத்தும்
4) உயிரிகளை மட்டும் பயன்படுத்தும்
5) பீடை நாசினி பாவனையில் முற்றாக தங்கியிருக்கும்

48) அறுவடைக்கு பின்னான இழப்பு இழிவாக்கப்படக்கூடியது

A - சரியான முற்றல் நிலையில் அறுவடை செய்வதால்
B - பொருத்தமான கொண்டு செல்லலினால்
C - பொருத்தமான பொதியிடு பதார்த்தங்களை தெரிவு செய்வதனால்

சரியானவை

1) A, B 2) B, C 3) A, C 4) A, B, C 5) B

49) சந்தையில் காணத்தக்க நிலைமைகள் சில

A - அதிக லாபம் தொடர்ச்சியாக கிடைத்தல்
B - அதிக கொள்வனவாளர்களும் விற்பனையாளர்களும்
C - தீர்மானிக்கப்பட்ட விலை நிலவுதல்

நிறை போட்டி சந்தையில் காணப்படுபவை

1) A மட்டும் 2) B மட்டும் 3) C மட்டும் 4) A, B 5) B, C

50) கோழியின் உணவு பாதையை வெட்டி சோதிக்கும் போது பித்தப்பையின் நிறம்

1) மஞ்சள் 2) செம்மஞ்சள் 3) சிவப்பு
4) மென்சிவப்பு 5) பச்சை